**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னேற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்) - 2021**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 02 இன் (அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை முன்னெற்றம் மற்றும் சக்தி சேமிப்பு செயற்திட்டம்) 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரன்சிஸ் டி அபிவிருத்தி முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதிய சிஎல்கே 1008 -01 பி ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.2(எச்) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் நுழைவுகள் மற்றும் நீர் முறைமை வினைத்திறன் நிலைபேண் தன்மையை விரிவாக்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளது. கடன் வசதி உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 13,000 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 3,900 மில்லியன் தொகைக்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | திறைசேரி செயற்பாடுகளின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கை பிரகாரம் ஐ.அ.டொலர் 44,071.23 இற்கு சமமான ரூபா 7.99 மில்லியன் தொகையான 2019 ஆம் ஆண்டின் நாணயமாற்று வித்தியாசம் மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், செயற்திட்டத்தின் கடன் மீதி மற்றும் நடைபெறும் வேலைகள் அதே தொகையால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | 7.99 | பரிந்துரைக்கப்பட்ட சிக்கல்கள் 2022 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் செய்யப்படும். | தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிகாலத்தில் அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 6.45 மில்லியன் கிரயத்தில் கணனிகள் மற்றும் அலுவலக தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் ஆலாசனை மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது நிலையான சொத்துக்களாக காட்டுவதற்குப் பதிலாக ஆலோசனை செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்ட அமுலாக்கல் பிரிவிற்காக ரீஜரு ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட கணனிகள் மற்றும் அலுவலக தளபாடங்கள் நிலையான சொத்துக்களாக காட்டுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 6.45 | பரிந்துரைக்கப்பட்ட சிக்கல்கள் 2022 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் செய்யப்படும். | தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிகாலத்தில் அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| கொள்வனவு வழிகாட்டலின் 4.2.2 ஆம் பிரிவு | கொள்வனவு வழிகாட்டலின் 4.2.2 ஆம் பிரிவிற்கு முரணாக ஐஊடீ-3 இன் கீழ் இரண்டு மாடி உத்தியோகபூர்வ விடுதிகள் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக செயற்திட்டமானது 45 வாரங்கள் (313 நாட்கள்) எடுத்திருந்தது. | உத்தியோகபூர்வ விடுதிகள் நிர்மாண ஒப்பந்தின் நோக்கெல்லை அம்பத்தளை நீர் சுத்திகரிப்பு பொறி வளவிற்கு இடம் மாற்றுவதற்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த மாற்றத்தின் பிரகாரம், ஒப்பந்தகாரருடன் பேரம் பேசல் இடம்பெற்றதுடன் அந்த மாற்றங்களை உள்ளடக்கி திருத்தம் 1 தயாரிக்கப்பட்டது. இதன்படி, அந்த காரணங்களால் ஒப்பந்த அனுமதி கடிதம் வழங்கல் தாமதப்பட்டிருந்தது. | எதிகாலத்தில் அத்தகைய கொள்வனவு தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது 2014 செப்தெம்பர் 29 இல் அதன் நடவடிக்கைகளை தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் இலக்குகளை அடைய தவறிய காரணத்தால் செயற்திட்ட காலப்பகுதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 7 ஆண்டுகளும் 03 மாதங்களும் கடந்த பின்னரும் முறையே 56.83 மற்றும் 43.89 சதவீதமாக இருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | நடவடிக்கைகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு (மு) | அடையப்பட்ட இலக்கு (மு) | | | |
| (அ) | 5 கிமீற்றர், 1200 மிமீ டிஐ குழாய்களை வழங்கி குழாயிடுவதுடன் கோத்தட்டுவ 15000 கன மீற்றர் நீர்தேக்கம் மற்றும் மொரகஸ்முல்லவில் | 59.90 | 31.03 | ஒப்பந்த காலப்பகுதி நீடிக்கும் சாத்தியம் மற்றும் செயற்திட்ட பூர்த்தியாக்கல் பாதகமாக பாதிக்கக்கூடும். | ஆரம்ப ஒப்பந்தத்தின் பரஸ்பர இடைநிறுத்தல், நீர்த்தேக்க நிர்மாணத்திற்கான காணி வழங்குவதற்கு சுகாதார | எதிர்பாராத நிலைகளை சமாளிப்பதற்கும் வேலைகளை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பூஸ்ரர் இறைக்கும் இல்லங்களின் நிர்மாணம் (ஐஊஆடீ-03) | | | | அமைச்சு நிராகரித்தமை பின்னர் அம்பத்தளை நீர் சுத்திகரிப்பு பொறி வளவுக்கு இடம் மாற்றப்பட்டமை , பொருட்கள் இறக்குமதித் தடை மற்றும் கோவிட் 19 நோயத்தொற்று போன்றன காரணமாக மற்றும் ஐஊஆடீ 03 ஒப்பந்தம் தாமதப்பட்டிருந் தது. | வேண்டும். மேலும், வழமையான ஒப்பந்த வேலைகளை கால அட்டவணைக் குள் பூர்த்தியாக்கும் நோக்கில் நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | அம்பத்தளையிலிருந் து எலியகவுஸ் நீர்தேக்கத்திற்கு 9 கி.மீ டச்சு வகை இரும்புக் (1200 மிமீ டையா) குழாய்கள் மற்றும் உப பாகங்களை வழங்கி குழாயிடுதல். (ஐஊஆடீ-04) | 100 | 82.98 | -மேற்படி- | நிர்மாண காலத்தின் போது எதிர்நோக்கிய பிச்சனைகள் மற்றும் கோவிட் 19 நோயத்தொற்று போன்றன காரணமாக மற்றும் ஐஊஆடீ 04 ஒப்பந்தம் தாமதப்பட்டிருந் தது. | -மேற்படி- |
| (இ) | ஏனைய உற்பத்தி வசதிகளின் குறைக்கப்பட்ட உராய்வு மற்றும் காசாக்கல் ஊடாக முறையான இயலளவு, பரிமாற்ற நட்டம் குறைத்தலுடன் திறனான பம்பினை பொருத்துவதன் மூலம் சக்தி சேமிப்பிற்காக அம்பத்தளை உற்பத்தி வசதிகளின் நியாயமான காசாக்கல் மற்றும் சக்தி சேமிப்பு (ஐஊஆடீ-05) | 100 | 46.88 | திட்டமிட்டவாறு பரிமாறற நட்டத்ததைக் குறைத்தல் மற்றும் சக்தி சேமித்தல் என்பன அடைவதிலுள் ள தாமதம் செயற்திட்ட பூர்த்தியாக்கல் பாதகமாக பாதிக்கக்கூடும். | கொள்வனவு செயற்பாட்டில் தாமதம், எதிர்பாராமல் நில நிலைகளில் எழுந்த வடிவமைப்பு மாற்றம், உப ஒப்பந்தகாரர் நியமிப்பதில் தாமதம் போன்றன காரணமாக மற்றும் ஐஊஆடீ 04 ஒப்பந்தம் தாமதப்பட்டிருந் தது. | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | வடிவமைப்பு மீளாய்வு மற்றும் நிர்மாண மேற்பார்வை ஆலோசனை சேவைகள் (னுசுஊளுஊ) | 97.64 | 95.58 | ஆலோசனை சேவைகள் காலப்பகுதி 2020 திசெம்பர் 31 அளவில் முழுமையாக பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் ஒப்பந்தம் வழங்கலில் திறனின்மை மற்றும் ஒப்பந்தகாரரின் நலிவான என்பன காரணமாக பிரதான சர்வதேச மற்றும் உள்நாட்டு நிபுணர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் ஆலோசனைக் காலப்பகுதி 2022 பெப்ரவரி 28 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது. . | 4.1.1, 4.1.2 மற்றும் 4.1.3 இல் குறிப்பிடப்பட்ட காரணங்களால் சகல ஒப்பந்த பொதிகளும் நீடிக்க வேண்டிய தேவையால் னுசுஊளுஊ ஒப்பந்தமும் நீடிக்கப்பட்டது. | கால அட்டவணைக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறவேற்றுவதற்கும் நெருக்கமாக கண்காணிக்கவும் ஆலோசனையார் அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

**3.2. ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச மற்றும் உள்நாட்டு நிபுணர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை, ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரரின் நலிவான செயலாற்றல் காரணமாக வடிவமைப்பு மீளாய்வு மற்றும் ஒப்பந்த மேற்பார்வை ஆலோசணை சேவையின் காலப்பகுதி 2022 பெப்ரவரி 28 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், 2021 திசெம்பர் 31 இல் எதிர்பார்த்த 97.64 சதவீதத்தில் 95.58 சதவீத பௌதீக செயலாற்றலாக இருந்தது. | ஆலோசனை சேவை முன்னரே பிரதான நிபுணர்களை சேர்க்காமையால் சேமிப்பிலிருந்து நீடிக்கப்பட்டிருந்தது. | கால அட்டவணைக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் செயற்திட்ட நடவடிக்கைகளை நிறவேற்றுவதற்கும் நெருக்கமாக கண்காணிக்கவும் ஆலோசனையார் அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை பிரகாரம், 2021 திம்பெர் 31 இல் உள்ளவாறு ஐஊடீ-04 ஒப்பந்தமானது ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 82.98 சதவீதத்தை மாத்திரம் அடைந்திருந்தது. இருந்த போதிலும் ஒப்பந்தகாரர் 2022 யூன் 30 வரையும் ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குதற்கு தவறியிருந்தார். எவ்வாறாயினும்,மேலே குறிப்பிடப்பட்டவாறு நிர்மாண வேலைகளின் மெவுான முன்னேற்றம் மற்றும் நிர்மாண வேலைகளிற்காக குறித்த காலப்பகுதிக்கு செலவழித்த அதேநேரம் ஒப்பந்த பெறுமதிக்கு 4 சதவீதத்திற்கு சமமாகவிருந்த ரூபா 83.46 மில்லியன் தொகை தாமதக் கட்டணங்களிற்கான நிதிக் கட்டணங்களாகவும் தற்காலிக நிறுத்தலிற்கான பயன்படுத்தாமை கட்டணங்களாகவும் செலுத்தப்பட்டதுடன் செயற்திட்டமானது 2021 பெப்ரவரிக்கும் 2022 மே மாதத்திற்கும் இடையிலான கால நீடிப்பின் போது ஆரம்ப செலவினமாக ரூபா 11.75 மின்னியன் தொகையும் ஏற்பட்டிருந்தது. | 4.1.2 இன் கீழ் வழங்கப்பட்ட தாமதங்களிற்கான காரணங்கள் ஒப்பந்த நிபந்தனைகளின் உட்பிரிவு 14.8 இன் பிரகாரம் பொருத்தமான தாமதங்களிற்கான நிதிக் கட்டணங்கள் மற்று தாமதக் கொடுப்பனவுகள் ஒப்பந்தகாரர் கோரியிருந்தார். | எதிர்பாராத நிலைகளை சமாளிப்பதற்கும் கால அட்டவணைக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்கவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (இ) | கோத்தட்டுவ 15000 கன மீற்றர் நீர்தேக்கம் மற்றும் 5 கிமீற்றர், டிஐ குழாய்களை வழங்கி குழாயிடுவதுடன் பூஸ்ரர் இறைக்கும் இல்லங்களின் நிர்மாண ஒப்பந்தம் (ஐஊடீ-03) 2022 யூன் 6 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கை பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 31.03 சதவீதமாக இருந்ததுடன் இது 2022 மே 31 இல் உள்ளவாறு 53.55 சதவீதமாக இருந்தது. இதன்விளைவால், ஒப்பந்த காலப்பகுதியின் அடுத்த 04 மாதங்களிற்குள் 46.45 சதவீதமான மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கல் ஐயத்திற்கிடமாகவுள்ளது. | செயற்திட்ட நிர்ணய குறிப்பின் பிரகாரம், அடுத்த 04 மாதங்களிற்குள் 46.45 சதவீதமான மிகுதி வேலைகளின் அடைதல் நடைமுறைக்கு சாத்தியமற்றிருந்தது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டு முதல் 2022 மே 31 வரையான நாட்டு நிலைம காரணமாக சமர்ப்பிக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் முன்னேற்றத்தின் சதவீத்தை பெறுவதற்கு நாட்டு நிலைமை சாத்தியமற்றிருந்தது. | வேலைகளை நிறவேற்றுவதற்கும் கால அட்டவணைக்குள் பூர்த்தியாக்கும் நோக்கில் ஒப்பந்த வேலைகளை நெருக்கமாக கண்காணிக்கவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஈ) | முறையான இயலளவுடன் திறனான பம்பினை பொருத்துதல் ஒப்பந்தம் மூலம் சக்தி சேமிப்பிற்காக அம்பத்தளை உற்பத்தி வசதிகளின் நம்பகமான காசாக்கல் மற்றும் சக்தி சேமிப்பிற்கான ஒப்பந்தம் (ஐஊடீ 05) 2020 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் ஒப்பந்த காலப்பகுதி 2022 சனவரி 26 வரை இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது. மொத்த செயற்திட்ட | யுகுனு இடமிருந்து அனுமதி பெறும் வரை நுழுவு வழங்கலிற்காக ஊழியர் காத்திருக்காததுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளின் நிர்ணயிப்பால் ஒப்பந்தகாரரால் நிலைநிறுத்த வேண்டியிருந்தது. ஒப்பந்த நிபந்தனைப் பிரகாரம், ஏற்றுக்கொள்ளக்கூடிய டுனு இருக்கவில்லை. | -மேற்படி-- |

நடவடிக்கைகளிலிருந்து 45.60 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த ஒப்பந்தம் 2021 திசெம்பர் 31 உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 46.88 சதவீதம் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், பொறி மற்றும் உபபாகங்களின் வழங்கலின் கீழான ஆறு விடயங்கள் 2022 யூன் 30 வரையும் கொள்வனவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, நீடிக்கப்பட்ட செயற்திட்ட காலப் பகுதிக்குள் ஒப்பந்த பூர்த்தியாக்கலின் சாத்தியத் தன்மை ஐயத்திற்கிடமாகவுள்ளது. மேலும், ஒப்பந்தகாரர் 2022 ஆம் ஆண்டு இறுதி வரை மேலும் கால நீடிப்பை வேண்யிருந்தார். எவ்வாறாயினும், கடனளிக்கும் முகவரால் 2022 யூன் 30 வரையும் இறுதி தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளருடைய சிபார்சுகள்** |
| --- | --- | --- |
| செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 7 ஆண்டுகளும் 03 மாதங்களும் கடந்த பின்னர் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 40.02 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 5,018.19 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 28.14 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவால், 2021 திசெம்பர் 31 வரை கைதவிர்க்கப்படாத கடன் மீதிகளிற்காக அரசாங்கத்தால் ரூபா 358.71 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.19 மில்லியன் கூட்டுத் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டமானது எதிர்பார்த்த திட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரர்களிற்கு நிதிகளை கைதவிர்ப்தற்கு இயலாதிருந்தது. ஆகவே, கடன் உடன்படிக்கை பிரகாரம் அரசாங்கம் கடப்பாட்டுக கட்டணங்களை செலுத்த வேண்டியிருந்தது. | திருத்திய செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்குவதற்கு அதகூடிய முயற்சி எடுக்க வேண்டும். |

### 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் (குசு) 756 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்திட்டத்தின் கொடுக்கல்கள் தொடர்பில் 2021 ஆம் நிதியாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை மேற்கொள்வாற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |